# திருத்தணிகைப் புராணம் காட்டும் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகள்

ச. சிவரக்ஷவி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை , கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி ,
கோயம்புத்தூர் – 641 029. sivarakshavi2000@gmail.com.

57

**திறவுச் சொற்கள்**

தணிகைப் புராணம், தலம், தீர்த்தம், சிறப்புப் பெயர், அடையாளம்.

**ஆய்வுச் சுருக்கம்**

கச்சியப்ப முனிவர் இயற்றிய தமிழ் சைவ இலக்கியமான தணிகைப் புராணத்தின் பதினெண் படலங்களில் ஒன்றான புராண வரலாற்றுப் படலத்தின் தமிழ் சுவையினை இவ்வாய்வு சுருக்கமாக எடுத்தியம்புகிறது.

**முன்னுரை**

கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணம் என்னும் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள பதினெண் படலங்களில் ஒன்றான சிறப்பு மிகுந்த புராண வரலாற்றுப் படலம் என்னும் படலத்தின் சுருக்கத்தினையும் அப்படலத்தில் அமைந்துள்ள தணிகை மலையின் சிறப்பினையும், தணிகை மலையின் பெயர் காரணங்களையும், தணிகையின் அடையாளங்களையும் சுருக்கமாக இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**தணிகைப்புராணம்**

ஒளி பொருந்திய கூர்மையான வேற்படையினை உடைய முருகக்கடவுள் கனவில் வந்து தணிகைப் புராணத்தை இயற்றுமாறுக் கூறத் தமிழில் வேறு எந்த நூல்களும் இதற்கு இணையில்லை என்று கூறத்தக்க சிறந்த சொற்சுவையோடும் பொருட்சுவையோடும் இப்புராணத்தை இயற்றியுள்ளார். இந்நூல் சிறந்த உவமைகளோடும் கற்பனை நயத்தோடும் இயற்றப்பட்டுள்ளது.

தணிகைப் புராணம் மொத்தம் பத்தொன்பது படலங்களையும் மூவாயிரத்து நூற்றறுபத்து ஒரு (3161) பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது. இத்தணிகை புராணப் படலங்களில் முதல் இரண்டு படங்களான திருநாட்டுப் படலம் மற்றும் திருநகரப் படலம் தவிர மற்ற ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தொன்மைக் கதைகள் முழுவதுமாகக் கூறப்பட்டுள்ளன.

**புராண வரலாற்றுப் படலம்**

முன்னொரு காலத்தில் வெள்ளிமலையின்கண் சிவபெருமான் உமாதேவியோடு சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது முறையே முப்பத்து முக்கோடி தேவர், முனிவர், சித்தர் முதலிய பலரும் பணிந்து விடைபெற்றுக் கொண்டிருந்தனர். இவருள் சப்தரிஷிகள் மாத்திரம் வணங்கி நின்றிருப்பதை கண்ட சிவபெருமான் நந்திதேவரது மாணவராகிய சனற்குமாரனை நோக்கி இம்முனிவர்களின் வேண்டுதலை இஷ்டத்தை நிறைவேற்றுவாயாக என திருவாய் மலர்ந்தருளினர்,

உடனே சனற்குமாரர் நந்திதேவரை வணங்கி, முனிவர்களைப் பார்த்து, ஓ! தவச்சீலர்களே! நீங்கள் உமாபதியை ஆடைந்துய்யும், வழியை விரும்பினீர்களன்றோ! அதற்கு பலவித வழிகள் இருந்தாலும் அவைகளுள் முதன்மையானது சிவபக்தி ஒன்றே. அதற்கு மூர்த்தி, தலம் தீர்த்தம் என்பவைகளை முறையே வழி படுதல் வேண்டும்.

சந்திரனை தலையில் அணிந்த சிவபெருமான் எழுந்தருளி இருக்கக்கூடிய சிறப்பு பெற்ற தலங்கள் அறுபத்து நான்கு, வேற்படையை கையில் ஏந்திய, வள்ளி தெய்வானையின் மணாளனான குமரக் கடவுள் எழுந்தருளி இருக்கக்கூடிய சிறப்புற்ற தலங்கள் அறுபத்து நான்கு மேற்கூறிய நூற்றிருபத்தெட்டுத் தலங்களிலும் மிகவும் சிறப்புற்று மேலாக விளங்கக்கூடியத் தலம் திருத்தணிகை மலையாகும் என்று சனற்குமாரர் சப்தரிஷிகளிடம் விளக்கினார். மேலும் சப்தரிஷிகளின் வேண்டுகோளுக்கிணங்க அத்தணிகை மலையின் அடையாளங்கள், தணிகை மலையில் உள்ள தீர்த்தங்கள், சுனைகள், தணிகை மலையின் பெயர்கள், அப்பெயர்களுக்கான காரணங்கள், சிவப்பூரண கிரி அமைந்துள்ள இடம் ஆகிய அனைத்தையும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஒழுகும் வண்ணம் எடுத்துக் கூறுகின்றார்.

**இணையில்லாதச் சிறந்த தணிகை மலை**

சிவபெருமான் எழுந்தருளியிருக்கக் கூடிய மிகவும் சிறப்புற்ற தலங்களான கைலாயம், இமயமலை, தருமகானம், நீலகண்டம், குலாச்சலம் போன்ற அறுபத்து நான்கு தலங்களிலும், ஆறுமுகக் கடவுளான முருகப்பெருமான் எழுந்தருளி இருக்கக்கூடிய அறுபத்து நான்கு தலங்களிலும் மிகவும் சிறப்புற்ற தலம் உலகத்தில் உள்ளவர் புகழத்தக்க சிறப்பு மிகுந்த தணிகை என்னும் திருத்தலமே ஆகும். மேற்கூறிய ஈசன் எழுந்திருக்கக் கூடிய அறுபத்து நான்கு சிறப்புற்ற தலங்களிலும், முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கக்கூடிய சிறப்புற்ற அறுபத்து நான்கு தலங்களிலும் மிகவும் மேலாக உயர்ச்சி பெற்று விளங்க கூடியது திருத்தணிகை என்னும் திருத்தலமே ஆகும் என்பதனை,

***"….சீ பூரண கிரியென்***

**றுரைதரு நாலெண் ணிருதல முருகற் குறுதல நுமக்கொத்த தலமும்**

**புரையிலித் தலத்து ளுயர்ந்த நான் கீற்றுற் புகன்றநாற் றலமவை யவற்றுள்"** (தணிகை புராணம் விளக்க உரையுடன், ப.எண் 187) என்ற கச்சியப்பரின் வரிகளின் மூலம் அறியலாம்.

**தணிகையின் சிறப்புப் பெயர்களும் காரணங்களும்**

தணிகை மலை பல்வேறு காரணங்களால் பல்வேறு சிறப்புப் பெயர்களுடன் வழங்கப்படுகின்றது அதில் குறிப்பிடத்தக்க பெயர்கள் கீழ்க்காணுமாறு,

**"என்றுமோ ரியல்பின் னின்றியும் சீபூ**

**ரணத்தினை யாயிடை வதிவோர்…"** (தணிகை புராணம் விளக்க உரையுடன், ப.எண் 188) என்று கச்சியப்பர் கூறினார் போல எக்காலத்திலும் ஒரே தன்மையாக நிற்கின்ற சீப்பூரண கிரி அங்கு தங்குகின்றவர்களுக்கு நிச்சயமாக வீடுபேற்றினை தருவதால் **"சீபூரண கிரி"** என்னும் பெயரினை உடையதாம்.

தேவர்களின் செல்வங்கள் எல்லாம் நிறைந்து நிற்றலான் இச்சீபூரணம் என்னும் பெயரினை

இம்மலைக்கு வழங்குபவர்களின் மேன்மை கொண்ட வரங்களைக் கண நேரத்தில் வழங்குவதால் **"கணிகமலை"** என்றும் உயர்த்தி சொல்வார்கள். உலகத்தை உளவாக்கிய சிவபெருமானே முருகக்கடவுளைத் தனக்கு மூல காரணனாகக் கொண்டு வழங்குதலினால் **"மூலத்திரி"** என இம்மலை சிறப்பித்து அழைக்கப்படுகின்றது. நாள்தோறும் காவிக் கொடி என்னும் ஒரு கொடி மூன்று மலர்களைப் பூக்கச் செய்வதனால் **"காவியத்திரி"** என்று பெயர் பெற்றது.

இறைவன் சங்கரிக்கின்ற கர்ப்ப முடிவிலும் அழியாது இருத்தலினால் **"கற்பசித்தாம்"**. **"தணிதலிற் தணிகை"** (தணிகை புராணம் விளக்க உரையுடன், பக்க எண் 188) அமர்ந்து தனிதலினாலே **"தணிகை மலை"** ஆகும். பிரணவம் என்னும் மந்திரத்தின் பொருளை முருகப்பெருமான் ஈசனுக்கு உணர்த்தியதினாலே **"பிரணவார்த்த மாநகரம்"** என்று மிகவும் சிறப்பாக உயர்த்தி சொல்லப்படுகின்றது. இந்திரனுக்கு வேண்டிய வரங்களை அளித்தலினால் **"இந்திர நகரம்"** என்றும் இம்மலை அழைக்கப்படுகின்றது.

**"மகதியாழ் முனிக்குறு பிரியம்**

**விரவிய சிறப்பா னூரதப் பிரியம்.."** (தணிகை புராணம் விளக்க உரையுடன், பக்க எண் 189) என்ற வரிகளின் மூலம் கச்சியப்பர், மகதி என்னும் யாழினை உடைய நாரத முனிக்கு மிகப் பிரியம் கலந்த சிறப்பினாலே **"நாரத பிரியம்"** என்னும் பெயரினை தணிகை மலை அடைந்துள்ளது என்கின்றார். வீடுபேற்றினை அகோரம் என்னும் குற்றம் நீங்கிய முனிவனுக்குக் கொடுத்துக் காத்தலினால் **"அகோர கைவல்லியப் பிரதம்"** என்னும் பெயரினை பெற்று இத்தணிகை மலை விளங்குகின்றது.

**தணிகை மலை அமைந்துள்ள இடம்**

வெள்ளிய அலைகளோடு கூடிய கங்கா நதியால் சூழப்பட்டக் காசியாகிய பெரிய நகரத்தின் தெற்கே இருநூறு யோசனை தூரத்திலும், வளம் பொருந்திய தமிழினை உடைய காஞ்சி மாநகருக்கு வடக்கே இரண்டு யோசனை தூரத்திலும், கிழக்கே வளைந்துள்ள கடலுக்கு மேற்கு திசையில் ஐந்து யோசனை தூரத்திலும், அடியார்கள் சுற்றி வணங்குகின்ற திருவிரிஞ்சை நகரத்தின் வடக்கெல்லையில் இருந்து மூன்று யோசனை தூரத்திலும், தேவர்கள் சூழப்பெற்று வணங்குகின்ற திருக்காளத்தி மலைக்குத் தென்மேற்குத் திசையில் மூன்றரை யோசனை தூரத்திலும் இத்தணிகை மலை வேறொன்றுக்கும் இல்லாத சிறப்புடன் அமைந்துள்ளது.

**தணிகை மலையின் அடையாளங்கள்**

இளமையாகிய வெள்ளிய பிறை சந்திரனைச் சூடிய சடாபாரத்தினை உடைய குருபரனாகிய சிவபெருமான் பிரணவார்த்த மந்திரத்தினை விருப்பம் தங்க தவம் செய்து பெற்று வீரநகைச் செய்த காலத்து இலிங்கமாகத் தோன்றினார். அவ்விலிங்கமானது ஒளியோடு கூடிய வேற்படையை உடைய குமரக்கடவுள் பிறப்பிறப்பிற் சுழலுதற்கு ஏதுவாகிய பாவங்களைக் கெடுக்கும் தன் பெயரால் வழங்கும் வண்ணம் கூடிய **"குமரேசலிங்கம்"** தணிகை மலையில் உள்ளது.

**"குருமொழி வேட்டு நந்தியா தவங்கள்**

**குயிற்றய குகையுமற் றவற்கு**

**மருமலர் கடப்பந் தாரினா னழைத்த**

**மணித்திரை நந்திநந் தினியும்..**" (தணிகை புராணம் விளக்க உரையுடன், பக்க எண் 191) என்ற வரிகளில் உள்ளவாறு செவியறிவுறுதலை விரும்பி நந்தியம்பெருமான் தவங்களைச் செய்த நந்திக் குகையும், அந்நந்தியம்பெருமானுக்கு முருகப்பெருமான் அழைத்தருளிய அழகியலோடு கூடிய நந்தி நந்தினி என்னும் நதியும், அகத்திய முனிவன் போற்றுகின்ற மிக்க ஒளியோடு கூடிய **"இலிங்கமும்"** அங்கு உள்ளனவாகும்.

இந்திரனும் பிரம்மனும் விண்டுவும் ஆதிசேடனுமாகிய இவர்களின் நெறி கடந்து செல்கின்ற வலிமையுடைய சூரன் கைப்பற்றிய அழிவில்லாத தங்கள் செல்வங்களைப் பெற விரும்பி அர்ச்சனை செய்த அருளோடு கூடிய **"இலிங்கங்கள்"** பலவும் தணிகை மலையில் உள்ளன.

முருகக்கடவுள் சென்று இதழ்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய பூங்கொத்துகளை உடைய கூந்தல்களோடு கூடிய சுந்தரவல்லியாகிய வள்ளியம்மையாரை மணந்து பாடகம் என்னும் மணிப்பொலிவுப் பெற்ற அடியினை உடைய தெய்வயானையாருடன் தங்கும் அத்தணிகை மலையில், முருக்கானிகளால் பொலிந்த நரம்புக் கட்டினை உடைய யாழ் ஏந்திய நாரத முனிவன் வணங்கும் **"சிவலிங்கமும்"** அங்கு உள்ளது.

**தணிகை மலையில் உள்ள தீர்த்தங்கள்**

சிவபெருமான் குமாரக் கடவுளிடம் பிரணவ மந்திரத்தினை ஞான உபதேசம் பெற்று வீராட்டகாசம் செய்த காலத்து சிவபெருமானின் சடாபாரத்திலிருந்து தோன்றிய கங்கை நதியானது **"சிவகங்கை தீர்த்தம்"** என்னும் பெயரில் இத்தலத்தில் விளங்குகின்றது. வேற்படையாகிய ஞான சக்தியினை பெற குமரக்கடவுள் விரும்பிய காலத்து செவ்வேள் கைலாயத்திலிருந்து வரவழைத்த கங்கையானது **"குமார தீர்த்தம்"** என்னும் பெயரில் விளங்குகின்றது. பிரம்மதேவன் குமரக்கடவுளை நோக்கி தவம் செய்து அட்ச சூத்திரமும், கமண்டலமும், சிருஷ்டி தொழிலும் பெரும் பொருட்டு உண்டாக்கிய **"பிரம்ம தீர்த்தமும்"**, பிரமேஸ்வரன் என்னும் சிவலிங்க தீர்த்தமும் அவ்விடத்தில் இருக்கின்றன.

சரஸ்வதி அம்மையார் முன்னர் திருத்தணிகையின்கண் எழுந்தருளி உண்டாக்கிய **"சரஸ்வதி தீர்த்தமும்"**, சரஸ்வதியினால் பிரதிஷ்டை செய்து பூசிக்கப் பெற்ற சரஸ்வதீஸ்வரர் என்னும் சிவலிங்கமும் அவ்விடத்தில் இருக்கின்றது. நந்தியெம்பெருமான் சிவபெருமான் உத்திரவின்படி தணிகாசலத்தில் எழுந்தருளி குமாரக்கடவுளை நோக்கித் தவஞ்செய்த நந்திக்குகையும், நந்திதேவரின் பொருட்டு குமாரக் கடவுள் வரவழைத்த **"நந்தியாறும்"** அவ்விடத்தில் இருக்கின்றன.

அகஸ்திய மகாமுனிவர் சிவபெருமான் உத்திரவின்படி, தமிழை கற்றுக்கொள்ளும் பொருட்டு தவஞ்செய்ய பிரதிஷ்டை செய்து பூசித்த அகஸ்தீஸ்வரர் சந்நிதானமும் அகஸ்தியரால் உண்டாக்கிய **"அகஸ்திய தீர்த்தமும்"** திருத்தணிகையில் உள்ளன. தேவேந்திரன் தேவலோகத்திலிருந்து நீலோற்பல மலரை வரவழைத்து நாட்டிய இந்திர நீலச்சுனையும், அவரால் பூசிக்கப்பெற்ற செங்கழுநீர் விநாயகக்கடவுள் சந்நிதானமும் இந்திரேஸ்வரரென்னும் சிவலிங்கமும், **"இந்திர தீர்த்தமும்"**, அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன.

மகாவிஷ்ணு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த விஷ்ணுவேஸ்வர மூர்த்தியும், விஷ்ணுவால் உண்டாக்கிய **"விஷ்ணு தீர்த்தமும்"** தணிகாசலத்தின்கண் இருக்கின்றன. வாசுகியென்னும் நாகராஜன் மூழ்கிய **"நாகதீர்த்தமும்"**, நாகராஜனால் பூசித்த நாகேஸ்வரமூர்த்தியும் அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன. இராமபிரான் குமாரக்கடவுளைப் பூசித்து ஞானோபதேசம் பெற்று சீதாப்பிராட்டியாரோடு வீற்றிருக்கும் சந்நிதானமும், பூசித்த **"சிவலிங்க தீர்த்தமும்"** அத்தணிகையின்கண் இருக்கின்றன. நாரத மகாமுனிவர் சிவலிங்க பிரதிஷ்டைசெய்து, தீர்த்தமுண்டாக்கி பூசித்ததால் நாரதலிங்கமெனவும், **"நாரத தீர்த்தமென்றும்"** கூறும் சிறந்த தீர்த்தங்கள் அத்தணி காசலத்தின்கண் இருக்கின்றன.

**தீர்த்தத்தின் சிறப்பு**

**"அத்தகு வரைப்பி னெழுசுனை யாடி**
**யருந்தவ மாதிக ளியற்றின்**
**சித்தமா சிரிய விழிஞரு மொல்லை**
**சிவத்தினைச் சிவணுவர் கண்டீர்..."** (தணிகை புராணம் விளக்க உரையுடன், ப.எண் 198)

என்னும் அடிகளுக்கேற்ப தணிகை மலையில் அமைந்துள்ள மேற்கூறிய தீர்த்தங்களில் மூழ்கி தவம் முதலியவற்றை செய்து மனதின்கண் உள்ள குற்றமானது நீங்கத் தாழ்ந்தவரும் விரைவாக சிவத்தினோடு இரண்டற கலப்பார்கள் என்று மகாவித்துவான் கச்சியப்ப முனிவர் தன் இனிய தமிழில் திருவாய் மலர்ந்தருளி உள்ளார்.

**முடிவுரை**

மேற்கூறியவாறு, தமிழின் சுவையையும் இனிமையையும் நாட்டோர் அறியும் வண்ணம் தமிழ் இலக்கியங்களில் சிறந்தத் தணிகைப் புராணத்தை கச்சியப்ப முனிவர் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய ஒவ்வொரு புராணங்களும் நூல்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு வித்திட்டன எனில் மிகையாகாது.

**துணை நூல் பட்டியல்**

1. தணிகைப் புராணம் விளக்கவுரையுடன், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி - 6, சென்னை-1. (முதல் பதிப்பு 1965)

2. திருத்தணிகை புராணச் சுருக்கம், சென்னை பிரிண்டர்ஸ் அச்சுக் கூடத்திலும் டயமண்ட் அச்சுக் கூடத்திலும் பதிப்பித்தது. (முதல் பதிப்பு - 1922)

3. திருத்தணிகை க்ஷேத்திர மகாத்மியம் என்னும் தணிகை புராண வசனம், இயற்றியவர் தமிழ் வித்வான் த. பு. முருகேச நாயகர், பதிப்புரிமையாளர் ஏ. கே. செங்கல்வராய செட்டியார், திருத்தணி.